செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

**சுவடியியல் புலம்** நாள்:08.02.2024

**நடத்தும்**

# தமிழ்ச் செவ்விலக்கிய மரபில் மாயோன்

# Māyōṉ in the Heritage of Tamil Classical Literature

**பயிலரங்கம்** - 19

(01.03.2024 - 07.03.2024)

## அறிவிப்பும் அழைப்பும்

உலகின் தொல்குடிகளுள் ஒன்றான தமிழ்க்குடியின் பண்பாடு தனித்தன்மை வாய்ந்ததாகும். தமிழர்கள் தாம் வாழும் சூழலுக்கு ஏற்ப ஒவ்வொரு நிலத்திற்கும் ஏற்ற கருப்பொருள்களில் ஒன்றாகத் தெய்வங்களைக் குறிப்பிட்டுள்ளனர். தமிழின் தொன்மையான நூலான தொல்காப்பியம் மாயோன், சேயோன், வேந்தன், வருணன் என்று நால்வகைத் தெய்வங்களைக் குறிப்பிடுகிறது. இவற்றுள் காடும் காடுசார்ந்த இடமான முல்லை நிலத்திற்குரிய தெய்வமாக மாயோன் முதன்மையாகச் சிறப்பிக்கப்படுகிறார்.

**“மாயோன் மேய காடுறை உலகமும்”** என்னும் தொல்காப்பிய நூற்பா மாயோனின் பன்னெடுங்கால வழிபாட்டை உணர்த்துவதாக உள்ளது. சங்க இலக்கியங்களில் இவ்வழிபாட்டின் தொடர்ச்சியைக் காணமுடிகிறது.

**“பால்நிறை உருவின் பனைக்கொடி யோனும்**
**நின்ற உருவின் நேமியோனும் என்ற**
**இருபெருந் தெய்வமும்…”** (புறம். 58)

என்னும் செய்யுள் அடிகள் மூலம் பலதேவனும் மாயோனும் இரு பெருந்தெய்வங்களாக வழிபடப்பட்டு வந்தமை புலனாகிறது. மேலும் **கலித்தொகையில்** மாயோனின் நிறமும் அவரின் திருக்குணங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. **பதிற்றுப்பத்தில்** திருமால் பூங்கொத்துகளை உடைய துழாய் மாலையை அணிந்துள்ளமை விளக்கப்பட்டுள்ளது. **பெரும்பாணாற்றுப்படையில்** தொண்டைமான் இளந்திரையன் என்ற மன்னன் திருமாலின் மரபில் உதித்த சோழர்களின் வழிவந்தவன் என்ற செய்தி பதிவாகி உள்ளது. மேலும் படைத்தல் தொழிலைச் செய்யக்கூடிய பிரம்மா திருமாலின் நாபிக்கமலத்தில் வீற்றிருப்பது, திருமால் அரவணையில் பள்ளி கொண்டிருப்பது முதலான செய்திகளைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மதுரைக்காஞ்சி, பரிபாடல், கலித்தொகை ஆகியவற்றிலும் திருமாலின் திருக்குணங்கள் பேசப்படுகின்றன. திருமகள் கேள்வனால் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள் பன்னிருவர் தம் பாசுரங்கள் மூலம் அருந்தமிழையும் வளர்த்தெடுத்தனர். திருமழிசையாழ்வாரின் தமிழுக்கு மயங்கி இறைவன் அவர் பின்சென்றதை,

**கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி**
**மணிவண்ணா நீகிடக்க வேண்டா - துணிவுடைய**
**செந்நாப் புலவனும் போகின்றேன் நீயுமுன்றன்**
**பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்.**

என்னும் பாசுரத்தால் அறியலாம். இதனை நினைவு கூறும் விதமாகத் தமிழைத்தேடி இறைவன் வருவதாகத் தம் வழிபாட்டு முறையை அமைத்து அதை இன்றளவும் நடைமுறைப்படுத்தி வருகின்றனர் திருமாலின் அடியவர்கள்.

தமிழ் மரபுக்கேற்ப எழுதப்பட்ட கம்பராமயணத்தில் திருமால் அறத்தை நிலைநிறுத்த வில்லினைத் தாங்கி வந்ததாகப் பல்வேறு நிலைகளில் விளக்கி உள்ளார் கவிச்சக்கரவர்த்தி கம்பர். மேலும், வில்லிபாரதம் திருமாலின் திருக்குணங்களை எடுத்துரைக்கும் ஏற்றமிகு படைப்பாகும்.

இவ்வாறு மாயோனைப் போற்றியுள்ள தமிழ் இலக்கிய மரபினைத் தொல்காப்பியம் தொடங்கிப் பாரதியார் வரை காண இயலுகிறது. இம்மரபு குறித்து ஆய்வு நோக்கில் மாணவர்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் சுவடியியல் புலம் **தமிழ்ச் செவ்விலக்கிய மரபில் மாயோன்** என்னும் தலைப்பில் ஏழு நாள் பயிலரங்கினை இத்துறை சார்ந்த அறிஞர்களைக் கொண்டு நடத்தத் திட்டமிட்டுள்ளது.

ஆய்வு மாணவர்கள் நேரடியாகப் பயன்பெறும் வகையில் கல்லூரி/ பல்கலைக்கழகத்தில் பயிலும் முனைவர் பட்ட, ஆய்வியல் நிறைஞர் மாணவர்கள் இப்பயிலரங்கில் பங்குபெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

## பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் பின்வருமாறு:

1. பயிலரங்கில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 30.
2. பயிரலரங்கு நடைபெறும் நாட்கள்:01.03.2024 முதல் 07.03.2024 முடிய 7 நாட்கள்.
3. பயிலரங்கு நேரம்: காலை 10.00 – 01.00 & மாலை 02.00 – 05.00.
4. பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, நாட்படி மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.

6. பங்கேற்பாளர்களுக்குத் தேநீரும், மதிய உணவும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.

7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் கீழே தரப்பட்டுள்ள விண்ணப்பத்தை நிறைவு செய்து workshopce@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் விவரங்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாக மட்டுமே தொடர்பு கொள்ள வேண்டும்.

8. பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.

9. விண்ணப்பம் உரிய வழியாக அனுப்பப்படுதல் வேண்டும்.

10. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல் / புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.

11. நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய இறுதி நாள் . 20.02.2024. கால தாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.

12. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 22.02.2024 அன்று மின்னஞ்சல் / புலனம் மூலமாகத் தகவல் தெரிவிக்கப்படும்.

13. இப்பயிலரங்கில் பங்கேற்போர் அனைத்து அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருவதைத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் மற்றும் இடைநிற்றல் இருப்பின் நாட்படியும், சான்றிதழும் வழங்கப்பட மாட்டா.

14. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)

செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100

# CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL

(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)

Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

सत्यमेव जयते


## சுவடியியல் புலம்

நடத்தும்

## தமிழ்ச் செவ்விலக்கிய மரபில் மாயோன்

## Māyōṉ in the Heritage of Tamil Classical Literature

பயிலரங்கம் - 19

(01.03.2024 - 07.03.2024)

## விண்ணப்பப் படிவம்

<table>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">பெயர்</td><td>தமிழ்</td><td colspan="6"></td></tr>
<tr><td>ஆங்கிலம்</td><td colspan="6"></td></tr>
<tr><td>2.</td><td colspan="2">பிறந்த நாள் / வயது<br>Age / Date of Birth</td><td colspan="6"></td></tr>
<tr><td>3.</td><td colspan="2">பாலினம் / Gender</td><td>ஆண்</td><td></td><td>பெண்</td><td></td><td>திருநங்கை</td><td></td></tr>
<tr><td>4.</td><td colspan="2">வகுப்பு / Class</td><td>பொது/<br>General</td><td></td><td>இ.பி.வ.<br>O.B.C</td><td></td><td>பட்டியல் இனத்தவர்/ SC/ ST</td><td></td></tr>
<tr><td>5.</td><td colspan="2">கல்வித் தகுதிகள் /<br>Educational Qualification</td><td colspan="6"></td></tr>
<tr><td>6.</td><td colspan="2">முனைவர் பட்டப் படிப்பில் சேர்ந்த நாள்/ Ph.D., Date of joining/ year</td><td colspan="6"></td></tr>
<tr><td>7.</td><td colspan="2">முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு / Ph.D. Research Topic</td><td colspan="6"></td></tr>
<tr><td>8.</td><td colspan="2">பல்கலைக்கழகம்/ கல்லூரி/ நிறுவன முகவரி (தொலைபேசி / மின்னஞ்சல் / University/ College/ Address (Mobile / Email)</td><td colspan="6"></td></tr>
<tr><td>9.</td><td colspan="2">இல்ல முகவரி & கைபேசி எண்<br>(Residential address &<br>Mobile No)</td><td colspan="6"></td></tr>
</table>

<table>
<tr><td>10.</td><td>புலன எண் / WhatsApp number</td><td colspan="4"></td></tr>
<tr><td rowspan="2">11.</td><td rowspan="2">செம்மொழி நிறுவனம் இக்கல்வியாண்டில் நடத்திய பயிலரங்கில் கலந்து கொண்டீர்களா? ஆம் எனில் விவரம் தருக. / Did you attend the workshop conducted by the CICT this academic year? If yes, please give details</td><td>ஆம்</td><td></td><td>இல்லை</td><td></td></tr>
<tr><td colspan="4"></td></tr>
</table>

**(கையொப்பம்)**

நாள்:

இடம்:

நெறியாளர் / துறைத் தலைவர்/

முதல்வர்/ பதிவாளர் உரிய முத்திரையுடன்